**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக் கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 6**
**LLU 6813 சட்டவியல்**
**ஆண்டு இறுதிப் பரீட்சை – 2020/2021**
**காலம் – மூன்று (03) மணித்தியாலம்**

---

திகதி : **07 செப்டெம்பர் 2021** நேரம் : **மு.ப. 09.30 – நண்பகல் 12.30**

---

**நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

வினா ஒவ்வொன்றும் **இருபத்தைந்து (25)** புள்ளிகளைக் கொண்டுள்ளது.

நபியாவின் குடிமகனாகிய திரு ரொனால்ட் என்பவன் 2015 இலிருந்து முற்றிலும் சுவாச உதவியில் தங்கியிருக்கும் நீண்டகால புற்றுநோயாளியொருவனாவான். அவன் அனுபவிக்கும் வேதனை மற்றும் வலி என்பவற்றை கண்ணுற்று அவனது நிலைமை தாங்கிக் கொள்ள முடியாதது என்பதனை அவனுடைய மனைவி மற்றும் பெற்றோர் 2020 இல் ஏற்றுக்கொண்டனர். திரு ரொனால்டின் சுவாச உதவியினை நீக்குமாறு கோரி அவர்கள் நபியாவின் உயர்நீதிமன்றினை நாடினர். நோயாளி தன்னுடைய உயிர் ஆதரவு இயந்திரத்தினை அகற்றுவதற்கு விரும்புகின்றார் என்பதை நிரூபிப்பதற்கு தெளிவானதும் கணிசமானதுமான சான்றுகள் உள்ள போதே வாழ்வை முடிப்பதற்கான கோரிக்கையினை அனுமதிக்கும் கட்டளையினை நீதிமன்றம் வழங்கும் என நீதிமன்றத்தின் பெரும்பான்மைத் தீர்ப்பு தெரிவித்தது. மருத்துவ உதவியுடனான தற்கொலையானது நபரொருவர் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களிலேயே அனுமதிக்கப்படும் என அத் தீர்ப்பு தெளிவுபடுத்தியது.

**குறிப்பு: 1, 2, மற்றும் 3 ஆகிய வினாக்கள் மேற்போந்த சம்பவத்தினையும் நபியாவின் உயர்நீதிமன்றின் வெவ்வேறு நீதிபதிகளினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களிலிருந்து பெறப்பட்ட பிரதிகள் என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டமைகின்றன.**

1. உதாரணமாக, நபரொருவர் நீண்டகால நோயினால் அவதிப்படுதல், தாங்க முடியாத வலியினால் அவதிப்படுதல் அல்லது அதிகளவு வேதனையினை அளிக்கும் வாழ்வினைக் கொண்டிருப்பதுடன் இறப்பதற்கான தன்னியல்பான விருப்பமிருப்பினும் உதவியின்றி தற்கொலை செய்ய முடியாதிருப்பின் அந் நபரினை இறப்பதற்கு அனுமதிப்பதற்கு அல்லது இறப்பதற்கு ஆதரவு அளிப்பதற்கு சட்ட மற்றும் வைத்திய சேவை வழங்குனர்கள் அங்கு இருக்க வேண்டும் என்பதுடன் வைத்திய ஆதரவுடனான தற்கொலையானது சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்பவே அனுமதிக்கப்பட வேண்டும் என பிரதம நீதியரசர், நீதிபதி B மற்றும் நீதிபதி C ஆகியோர் இவ் வழக்கில் வாதிட்டனர். நியதிச்சட்டமொன்றோ அல்லது பிரயோகிக்கப்படக் கூடிய சட்ட ஏற்பாடோ இல்லாத போது நீதிமன்றத்தினாலேயே அது பிரயோகிக்கப்பட வேண்டும் என பிரதம நீதியரசர் தெரிவித்தார். மருத்துவ ஆதரவுடனான தற்கொலை தொடர்பில் உயர் நீதிமன்றம் திட்டவட்டமான தீர்மானத்தினை வழங்கியதுடன் இயலச்செய்யும் நியதிச்சட்டமொன்றின் ஊடாக உள்நாட்டுச் சட்டத்தினுள் உள்வாங்கப்படாத சர்வதேச சமவாயங்களிலும்

தங்கியிருந்தது. தெளிவான சட்ட இடைவெளியொன்று அங்கு காணப்படுவதால் புத்துருவாக்க நீதித்துறைச் சட்டமியற்றுதலினை நீதிமன்றமானது தெரிந்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்தினை அடிப்படையாகக் கொண்ட சட்டவியற் கோட்பாட்டின் தத்துவார்த்த அடிப்படைகளை விளக்குக. இலங்கையின் சட்டமுறைமையின் தன்மையினை வரையறுப்பதில் இந்தக் கோட்பாட்டின் நடைமுறைப் பயன்பாட்டினை விமர்சனரீதியாக ஆராய்க.

2. இலங்கையின் தண்டனைச்சட்டக்கோவையினை ஒத்ததான நபியாவின் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 293 இல் நீதிபதி D மற்றும் நீதிபதி E ஆகியோர் தங்கியிருந்தனர். மருத்துவரீதியாக நபரொருவரினை கொலை செய்வது 'மருத்துவ ஆதரவுடனான தற்கொலையாக' கருதப்படாது தண்டனைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைவாக தண்டிக்கப்படக் கூடிய ஆட்கொலையாக கருதப்பட வேண்டும் என அவர்கள் வாதிட்டனர். சட்டத்தின் வெற்றுச் சொற்களை அவர்கள் புறக்கணித்துள்ளார்கள் என பெரும்பான்மையான நீதிபதிகளின் கருத்துக்களினை அவர்கள் எதிர்த்தனர். நியதிச்சட்டத்தின் வாசகங்கள் சட்டவாக்கத்துறையின் உண்மையான எண்ணத்தினை வெளிப்படுத்துகின்றன. நியதிச்சட்டத்தின் வாசகங்கள் அவை எதனைக் குறிக்க வேண்டும் என்பதாக அல்லாது அவற்றின் தெளிவான பொருளினை தரும் வகையில் பொருள்கோடல் செய்யப்பட வேண்டும். சட்டத்தினைப பொறுத்தவரையில் ஒழுக்க அல்லது தார்மீக ஆராய்வுகளோ அல்லது சட்டத்திற்கும் தார்மீகக் கோட்பாடுகளுக்குமிடையில் ஏதேனும் தொடர்புகளோ காணப்படுவதில்லை.

(a) நீதிபதி D மற்றும் நீதிபதி E ஆகியோரின் கருத்துக்களிலிருந்து பெறக் கூடிய தத்துவார்த்த அடிப்படையினை இனங்கண்டு சமகால சட்டமுறைமைக்கு இவ் தத்துவார்த்த கருத்தேற்புக்களை பிரயோகிப்பதன் வலிதுடமையினை விமர்சனரீதியாக மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

(b) சமகால சட்ட முறைமைகளில் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசின் பொறுப்புடமைகளில் சட்டம் மற்றும் தார்மீகக் கோட்பாடுகளுக்கிடையேயான வேறுபாடு எத்தகைய தாக்கத்தினை செலுத்தியது என ஆராய்க.

(10 புள்ளிகள்)

3. மேற்போந்த தீர்ப்பு மற்றும் மருத்துவ ஆதரவுடனான தற்கொலையுடன் தொடர்புடைய சர்வதேச தராதரங்கள் என்பவற்றின் அடிப்படையில் வைத்தியர்கள் மருத்துவ ஆதரவுடனான தற்கொலையினை செய்வதற்கு இயலுமானதாக்கும் வகையில் 2021 ஜீலையில் நபியாவின் பாராளுமன்றம் சட்டமூலமொன்றை முன்மொழிந்தது. அதனைத் தொடர்ந்து, நபியாவின் அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உயிர்வாழ்வதற்கான உரிமையானது இறப்பதற்கான உரிமையினை உள்ளடக்கவில்லை

என்று வாதிடுகின்ற அச் சட்டமூலத்தினை எதிர்ப்பவர்களினால் தொடர்ச்சியான சவால்கள் முன் வைக்கப்பட்டன. எனவே நபியாவின் அரசியலமைப்பின் அடிப்படை மதிப்புக்களை அது மீறுகின்றது. சட்டமூலத்தினை நிலைகுலையச் செய்யுமாறு பாராளுமன்றத்தினை அவர்கள் வற்புறுத்தினர். மறுபுறமாக, அச் சட்டமூலத்தினை ஆதரிப்பவர்கள் 'நோயாளிகளுக்கு தம்முடைய சுதந்திரமான தெரிவு மற்றும் மனித கண்ணியம் என்பவற்றை தக்க வைக்கும் வகையில் தம்முடைய சொந்த தீர்மானங்களை மேற்கொள்ள உரிமை உண்டு எனவும் இவ்வுரிமையானது ஆதரவளிக்கப்பட்ட தற்கொலையினைத் தெரிவதற்கான உரிமையினை உள்ளடக்குவதாகவும்' வாதிட்டனர். மருத்துவ ஆதரவளிக்கப்பட்ட தற்கொலையினை சட்டரீதியானதாக்குதலானது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், சட்ட முறைமையானது மக்களின் கலாச்சாரத்தின் பாகமென்பதால் நபியாவின் சட்டமாக்குபவர்கள் நாட்டின் வரலாற்று அபிவிருத்தியினை பின்பற்ற வேண்டும் எனச் சிலர் வாதிட்டனர். எனவே, சட்டமென்பது தன்னிச்சையாகவும் வேண்டுமென்றும் சட்டமாக்குபவரொருவரினால் உருவாக்கப்பட வேண்டிய ஒன்றல்ல.

இரண்டு பிரிவினராலும் முன்னெடுக்கப்பட்ட வாதப் பிரதிவாதங்களை ஆதரிக்கின்ற சட்டவியற் கொள்கைகளினை இனங்கண்டு பிரயோகிக்கப்படும் சட்டவியற் கொள்கைகளின் முக்கிய அம்சங்களில் கவனஞ் செலுத்தி ஆராய்க. அவ் வாதப் பிரதிவாதங்களினை இணக்குவதற்கு நவீன சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் சூழலில் சட்டமாக்குபவர்கள் மற்றும் சட்டவாளர்கள் எதிர்நோக்கும் சவால்களினை விமர்சனரீதியாக ஆராய்க.

4. 2020 டிசெம்பரில் நடைபெற்ற தேர்தலில் கியன்மார் நாட்டில் திருமதி ராகி என்பவள் 1975 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் பிரதம மமந்திரியாக தெரிவு செய்யப்பட்டாள். 2021 சனவரியில், புதிய பாராளுமன்றமானது இரண்டாவது தடவையாக அமர்வதற்கு கூட்டப்படுவதற்கு முன்னர் பிரதம மந்திரியினையும் ஏனைய ஆளுங்கட்சியின் உறுப்பினர்களையும் கியன்மாரின் இராணுவம் தடுத்து வைத்தது. அவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதுடன் அவ் அரசியற் பணியாளர்களுக்கு எதிராக பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களை பதிவு செய்ய இராணுவம் ஆரம்பித்தது. அதனுடைய தலைவருக்கு அதிகாரத்தினை கைளித்தது ஒருவருட காலத்திற்கு அவசரகால நிலைமையொன்றை பிரகடனப்படுத்தி இராணுவமானது நாட்டின் எல்லைகளினையும் தொடர்பாடல் முறைமையினையும் இராணுவம் மூடியது. இரண்டு நாட்களின் பின்னர் இராணுவச் சட்டத்தினை அமுல்படுத்திய இராணுவத் தலைவர் 1975 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினை இரத்துச் செய்தார்.

தற்காலிக அரசியலமைப்பு ஆணை இல 1 ஆனது 2021 ப்பெரவரியில் இராணுவத் தலைவரினால்இயற்றப்பட்டது. இராணுவச் சட்டத்தின் பிரகடனத்திற்கும் இராணுவத் தலைவரினால் காலத்திற்குக் காலம் உருவாக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளை என்பவற்றிற்கும் அமைவாகவே முடிந்தவரை நாடு ஆளப்பட வேண்டும் என அது ஏற்பாடு செய்தது. அப்போதிலிருந்து, சிவில் பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலாளிகள் மற்றும் சமயத் தலைவர்கள் உள்ளடங்கலாக ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் இராணுவ அரசாங்கத்திற்கு எதிராக வீதிகளில் போராடத் தொடங்கினர். இவ் ஆட்சிக்கவிழ்ப்பினை ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகளாவிய சனநாயக நாடுகளின் தலைவர்கள் கண்டித்ததுடன் அரசியல் தலைவர்களினை விடுவிக்கவும் உடனடியாக கியன்மாரில் சனநாயகத்தினை தாபிப்பதற்கும் அவர்கள் வலிவுறுத்தினர். அதே நேரத்தில், 2021 ப்பெரவரியில் இராணுவத் தலைவரினால் இயற்றப்பட்ட தற்காலிக அரசியலமைப்பு ஆணை இல 1 இனுடைய சட்ட

வலிதுடமை தொடர்பில் கியன்மாரின் உயர் நீதிமன்றத்தின் பத்து அரசியற் தலைவர்கள் ஆலோசனையினை அரசியற் தலைவர்கள் பததுப் பேர் நாடினர்.

கெல்சனின் சட்டக் கொள்கையுடன் தொடர்புபடுத்தி இவ் ஆட்சிக்கவிழ்ப்பின் சட்ட வலிதுடமையினை ஆராய்க.

5. ''அதனுடைய அடிப்படையான அக்கறைகள் பல தேசிய அரசியலமைப்புக்கள் மற்றும் சர்வதேசச் சட்டம் என்பவற்றில் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது என்பது இயற்கைச் சட்ட சிந்தனைப்பிரிவின் வலுவுக்கான மிகவுயர்ந்த சான்றாகும்..''

*Jurisprudence,* Suri Ratnapala,(2009) p.160

நவீன சட்டமியற்றும் செயன்முறையில் இயற்கைச் சட்ட சிந்தனையின் செல்வாக்குக்குட்பட்ட சட்ட பதிலளிப்புக்களுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி மேற்போந்த கூற்றினை விமர்சனரீதியாக ஆராய்க.

ஆகக் குறைந்தது மூன்று வெவ்வேறு நியாயாதிக்கங்களிலிருந்து பெறப்பட்ட உதாரணங்களினை மேற்கோள்காட்டி உமது விடையினை ஆதாரப்படுத்த வேண்டும் என நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

****பதிப்புரிமையுடையது ****